
# தூதன்

தூதன் - 32 | மார்ச் - 2023 | தூது - 3

நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு,
பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். 2 கொரி 5:21




தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 01 |
| உதவி போதகர் மடல் – ஃபுஜைரா | 05 |
| உதவி போதகர் மடல் – இராஸ் அல் கைமா | 06 |
| செயலர் மடல் | 08 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 10 |
| தவக்காலம் மனம் மாறும் | 11 |
| திருச்சபை ஜெபநாள் | 12 |
| வேதவினா போட்டி | 14 |
| தெரிந்துகொள்வோம் | 16 |
| Health Tips | 18 |
| Children's Corner | 20 |
| Birthday Celebrants | 26 |
| Wedding Anniversary | 30 |
| ஆராதனைப் பாடல்கள் | 31 |
| Getting your Spiritual Wellness Back to 100% | 32 |

# சபை போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான இறைமக்கள் அனைவருக்கும்
என் அன்பின் இனிய நல்வாழ்த்துக்கள்
தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அவர் (இயேசுகிறிஸ்து) தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு ... புறப்பட்டுப்போனார். (யோவான் 19:17)

சிலுவை:

பெரும் குற்றவாளிகளைச் சிலுவையில் அறைந்துதான் தண்டித்தார்கள். ஒரு குற்றவாளி சிலுவையில் அறையப்படும்போது உடலளவில் அவமானப் படுத்தப்படுகிறார். அவரின் உடலிலுள்ள ஆடைகள் அகற்றப்பட்டு நிர்வாணமாக்கப்படுவார்கள். சாகும்வரை சிலுவையிலே தொங்கி வேதனைகளை அனுபவித்து மரிப்பது என்பது விவரிக்கமுடியாத அவமானம். அப்படிப்பட்ட அவமானத்தின் சின்னமாகிய சிலுவையை இயேசு மீட்பின் கருவியாக மாற்றுகிறார். இடறலாகக் கருதப்பட்ட சிலுவை மனிதர்களுக்குப் பாதை காட்டுகிறது. மடமையாக எண்ணப்பட்ட சிலுவை சின்னம் இயேசுவின் இறப்பினால் வாழ்வின் ஊற்றாக உருவெடுக்கிறது. கிறிஸ்து ஏன் சிலுவை மூலம் உலகை மீட்டார், எதிலிருந்து சாவு தோன்றியதோ அதிலிருந்தே புத்துயிர் எழவும், மரத்தினாலே தோல்வி கண்டவன் மரத்தினாலே வெற்றி பெறவும் வேண்டுமென்று இருந்தது. ஒரு மரத்தின் (விலக்கப்பட்ட மரத்தின்) மூலம் சாவு இவ்வுலகில் நுழைந்தது. அதை கடவுள் மற்றொரு மரத்தின் மூலம், சிலுவை மரத்தின் மூலம் அழித்தார். மரத்தைக் கொண்டு மனிதனை வென்ற அலகையை மரத்தைக் கொண்டே சிலுவை மரத்தைக் கொண்டே அழித்தார் தோற்கடித்தார்.

மக்கள் அனைவரும் மீட்படைய, உலகம் பிசாசு சரீரம் என்ற பாவத்திலிருந்து விடுதலையடைந்து வெற்றியடைய இயேசு சிலுவையை ஏற்றுக்கொண்டார். நாம் ஆன்மீக நலம் பெற்று வெற்றியடைய அவர் சிலுவையில் தொங்கினார். சாவின் வழியில் பாவம் ஆட்சி செலுத்தியது போல நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வழியாய் அருள் ஆட்சி செய்கிறது. அந்த அருள்தான் மனிதர்களைக் கடவுளுக்கு ஒப்புடையவர்களாக்கி நிலைவாழ்வு பெற வழிவகுக்கிறது (ரோமர் 5:21).

## சிலுவை அன்பின் சின்னம் (Symbol of Love)

சிலுவை இறையன்பின் சின்னம். இறையன்பு பிறர் மேல் அதாவது இது பிறரன்பின் சின்னம். கிறிஸ்தவ வாழ்வு சுலபமான வாழ்வு அல்ல, அது சிலுவை வாழ்வு. அது சிரமம் நிறைந்தது. இறையன்பு பிறரன்பு இணைந்து வாழ்வதுதான் கிறிஸ்தவ வாழ்வு. இந்த இறையன்பு பிறரன்பு வாழ்வு சிலுவை வாழ்வுதான். சிலுவையின் நேர்க்கோடு, கடவுளின் மனிதனை அன்பு செய்யும் இறையன்பையும், சிலுவையில் குறுக்குக்கோடு இந்த இரண்டு அன்பும் சேர்ந்ததுதான் சிலுவை. அதனால்தான் சிலுவை அன்பின் சின்னம். சிலுவை சொல்லும் உண்மைகள் யாதெனில் சிலுவை இறைவனின் மகன் இயேசுவின் அன்பு எல்லையற்றது என்பதை தெளிவுபடுத்துகிறது. மேலும் அன்பு நிபந்தனையற்றது.

## சிலுவை தாழ்மையின் சின்னம் (Symbol of Submission)

கிறிஸ்து இல்லாமல் கிறிஸ்தவர் இல்லை. கிறிஸ்தவன் என்ற வார்த்தையில் கிறிஸ்து என்ற வார்த்தையை எடுத்துவிட்டால் மிஞ்சுவது I am nothing. நான் ஒன்றுமில்லாதவன்தான். கிறிஸ்துவோடு இணைந்து வாழ்வதுதான் சிலுவை வாழ்வு. கிறிஸ்தவ வாழ்வு என்னோடு இணைந்திருந்தால் பலன் தருவீர்கள். என்னோடு இணையாவிட்டால் உலர்ந்து போவீர்கள். என்னைப் பிரிந்து உங்களால் ஒன்றும் செய்ய இயலாது. என்னோடு இணைந்திருங்கள் நீங்கள் என்னோடு இணைந்திருந்தாலன்றி கனிதர இயலாது (யோவான்15:3-5)

அனைவராலும் ஒதுக்கப்பட்ட சின்னத்தை, சிலுவையை ஆண்டவர் இயேசு ஏற்றுக்கொண்டு அவமானத்துடன் தொங்குகிறார். அங்கும் அமைதி அர்ப்பணிப்புதான் உள்ளது. மாறாக வலியின் கொடுமையால் கட்டப்பட்ட போதிலும் அமைதியாகவே இருந்தார். யாரையும் எதிர்த்து இழிசொல் எதையும் பேசவில்லை. அதாவது தன்னையே இறைமகன் இயேசு தானமாய் தந்ததால் தரணிக்கு கிடைத்தது வாழ்வு, அகோரமான முடிவுக்கு சிலுவை வழிநடத்தும். ஆனால் இயேசு அமைதியாக தந்தையின் செயல்பாட்டிற்கு தன்னை ஒப்படைத்து இருந்தார். ஆகவே சிலுவை தாழ்மையின் சின்னம்.

## சிலுவையின் உருவத்தில் இயேசுகிறிஸ்து சுமந்தது என்ன?

### 1. நம்முடைய பாவத்தைச் சுமந்தார் (ஏசாயா 53:12)

அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களை சிலுவையின்மேல் சுமந்தார். நாம் உபத்திரவங்களை பொறுமையோடு சகித்துக் கொள்ளவேண்டும் என்பதற்கு ஒரு முன்மாதிரியை வைக்கவேண்டும் என்பதற்காக மாத்திரம் கிறிஸ்துவானவர் சிலுவையில் மரிக்கவில்லை. இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் தெய்வீக சித்தமும் திட்டமும் இடம்பெற்றிருக்கிறது. தம்முடைய அடிச்சுவடுகளை நாம் தொடர்ந்து வரும்படிக்கு கிறிஸ்துவானவர் நமக்கு பின்வைத்துபோனார்.

நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கவேண்டுமென்பதே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சித்தம். இதற்காக கிறிஸ்துவானவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம். இயேசுகிறிஸ்துவின் சரீரத்தில் தழும்புகளும் மரணமும் உண்டாயிற்று. இவையெல்லாம் பாடுகளின் கனிகளாக நமக்கு கொடுக்கப்படுகிறது.

நாம் அநியாயமாய் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையோடு சகித்துக் கொள்ளவேண்டும் என்பதற்கு ஒரு முன்மாதிரியாகவும் கிறிஸ்துவானவர் நமக்காகப் பாடுபட்டார். அத்துடன் நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு கிறிஸ்துவானவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களை சிலுவையின்மேல் சுமந்தார்.

### 2. நம்முடைய பாடுகளைச் சுமந்தார் (ஏசாயா 53:4)

இயேசுகிறிஸ்துவின் பாடுகளைப்பற்றி இங்கு இன்னும் அதிகமாய் சொல்லப்படுகிறது. கிறிஸ்துவானவர் பிதாவாகிய தேவனுக்கு முன்பாக தம்மை வெகுவாகத் தாழ்த்துகிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்துகிறார். அவருக்கு வருத்தங்களும் துக்கங்களும் உண்டாயிற்று. கிறிஸ்துவானவர் அவையெல்லாவற்றையும் பொறுமையோடு தாங்கிக்கொள்ளுகிறார். ஆனாலும் அவர் தம்முடைய வாயைத் திறந்து யாரிடமும் குற்றம் சொல்லவில்லை.

கிறிஸ்துவானவர் பாடுகளையும் வேதனைகளையும் சந்திப்பதற்குப் பயந்து ஓடி ஒளிந்து கொள்ளவில்லை. தம்முடைய பாடுகளிலும் வேதனைகளிலும், துக்கங்களிலும் அவர் மூழ்கிப் போய்விடவும் இல்லை.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து முடிவுபரியந்தம் தம்மேல் சுமத்தப்பட்ட பாடுகளைப் பொறுமையோடு சகித்துக்கொண்டார். கிறிஸ்துவானவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். நாமோ அதை எண்ணாமல் போய்விட்டோம். அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு சிறுமைப்பட்டவர் என்று எண்ணினோம்.

யூதமார்க்கத்தார் இயேசுகிறிஸ்துவை விசாரித்தார்கள். அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள். வாரினால் அடித்தார்கள். முகத்திலே துப்பினார்கள். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார். நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். அவருடைய சரீரத்தில் தழும்புகள் உண்டாயிற்று. அவருடைய தழும்புகளால் நாம் பூரண சுகம் பெற்றோம்.

நம்முடைய தேவன் எல்லாவற்றையும் இயேசு நிறை செய்துவிட்டார். லெந்து காலத்தில் இறைவனோடு இணைந்து வாழ்ந்து செயல்படுவோம். நமது ஆண்டவர் மனந்திரும்புதலைத் தருவார்.

இறைவன் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

உங்கள் திருப்பணியில்,
அருள்திரு. மோ. ஐசக் பெர்னாண்டஸ்.
சபை ஆயர்.

## திருமறைப் பாட ஒழுங்குகள் - மார்ச் 2023

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 05-03-2023 | மன்னிப்பளிக்கும் கிறிஸ்து | ஆதியா. 4:8-16 | ரோமர் 5:6-11 | மாற்கு 2:1-12 | 25 |
| 12-03-2023 | ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்து | ஓசியா 2:14-23 | பிலெமோன் 1:21 | மத்தேயு 15:21-28 | 87 |
| 19-03-2023 | விடுவிக்கும் கிறிஸ்து | யாத்தி. 3:1-14 | கலாத்தியர் 5:1-12 | லூக்கா 13:10-17 | 82 |
| 26-03-2023 | கிறிஸ்துவின் சிலுவையின் வழியாய் மீட்பு | யோபு 42:10-17 | எபேசியர் 2:1-10 | மாற்கு 10:46-52 | 126 |

CHURCH PICNIC









CHURCH PICNIC








# CSI TAMIL PARISH - DUBAI

## JC TEACHER'S RETREAT






## EARTHQUAKE RELIEF



TURKEY EARTHQUAKE RELIEF








# CSI TAMIL PARISH - DUBAI

EARTHQUAKE RELIEF



NEW CAR FOR PARSONAGE






# உதவி போதகர் மடல்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால்
என் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

யூதர்கள், ஆயக்காரர்களை திருடர்கள் என்றும், நாட்டைக் காட்டிக் கொடுத்தவர்கள் என்றும் கருதி வந்தனர். காரணம், ஆயக்காரர்கள் யூதர்கள் மிகவும் வெறுத்த உரோமையர்களிடம் வேலை பார்த்து வந்தார்கள். மேலும் இந்த ஆயக்காரர்கள் குறிக்கப்பட்ட தொகையைவிட மிகுதியாக மக்களிடம் வரிப்பணம் வசூலித்தார்கள் (லூக்கா 3: 12-13) இத்தகைய காரணங்களால் ஆயக்காரர்கள் மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டார்கள். நற்செய்தியில் வருகின்ற சகேயுவோ, சாதாரண ஆயக்காரர் கிடையாது. ஆயக்காரர்களின் தலைவர். ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வரி வசூல் செய்தவர்களுக்கெல்லாம் சகேயு தலைவராக இருந்தார். அப்படியானால், அவர் மக்களுடைய வெறுப்புக்கு எந்தளவுக்கு உள்ளாகியிருப்பார் என்று நாம் கற்பனை செய்து பார்த்துக் கொள்ளலாம். இப்படித் தன்னிடம் மிகுதியான செல்வம் இருந்தாலும், மக்களுடைய வெறுப்புக்கு உள்ளாகியிருந்த சகேயு இயேசுவைக் காணவிரும்பி ஒரு காட்டு அத்தி மரத்தில் ஏறிக்கொள்கின்றார்.

ஆண்டவராகிய கடவுள் நாம் அமர்வதையும் எழுவதையும் அறிபவர். தொலைவிலிருந்தே நமது உள்ளத்து உணர்வுகளை உய்த்துணர்கின்றவர் (சங். 139:2). அப்படிப்பட்டவர் உண்மையான நோக்கத்தோடு, நொறுங்கிய மனத்தோடு சகேயு தன்னைக் காண வந்திருக்கின்றார் என்பதை அறிந்து அவரிடம், "...இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்" என்கின்றார்.

மக்களால் பெரிதும் மதிக்கப்படும் இயேசு, தன்னுடைய வீட்டில் தங்கப் போவதாகச் சொன்னதும், சகேயு, தன் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்து விடுவதாகவும்..., அதை நான்கு மடங்காக திருப்பிக் கொடுத்து விடுவதாகவும் சொல்கின்றார். அப்பொழுதுதான் இயேசு அவரிடம், "இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று" என்று கூறுகின்றார். ஆம், கடவுள் நொறுங்கிய, குற்றம் உணர்ந்த உள்ளத்தைப் புறக்கணிப்பதில்லை (திபா. 51: 17). சகேயு நொறுங்கிய உள்ளத்தோடும் பாவத்தை உணர்ந்தவராயும் வந்ததால், இயேசு அவருடைய வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று என்கின்றார்.

ஆகையால், நாம் நம்முடைய குற்றத்தை உணர்வதோடு மட்டுமல்லாமல், அதன் வெளிப்பாடாக, சகேயுவைப் போன்று புதியதொரு வாழ்க்கை வாழ முயற்சி செய்து, கடவுள் தருகின்ற ஆசியைப் பெற்று மகிழ்வோம்.

"உலகைச் சார்ந்தவராய் இருக்கும் ஒருவர், கடவுளைச் சார்ந்தவராய் இருப்பதே உண்மையான மனமாற்றம்". ஆகையால், இந்த லெந்து நாட்களில் நாம் உலகைச் சார்ந்தவர்களாய் இல்லாமல், கடவுளைச் சார்ந்தவர்களாய் வாழ்ந்து, சகேயுவைப் போன்று உண்மையான மனமாற்றம் பெற்றவர்கள் ஆவோம். அதன்வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

கிறிஸ்துவின் பணியில்,
அருட்திரு. நத்தானியேல்
உதவி போதகர் ∴புஜைரா

# உதவி போதகர் மடல்

அன்பிற்கினிய இறை அன்பர்களே,
நல்மீட்பராகிய இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

"அப்பொழுது விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும், கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்."
(ஏசாயா 58:8)

லெந்து என்ற வார்த்தைக்கு "துளிர்விடுதல்" என்று பொருள் கொள்ளலாம். எனவே லெந்துகாலம் தீமையான பழையவற்றை உதிர்த்து, புதியவற்றைத் துளிர்க்கச் செய்யும் காலம். "இன்னா நாப்சோ" என்ற எபிரேய வார்த்தை உள்ளத்தை ஒடுக்குதல் என பொருள்படுகிறது. கி.பி. 4-ம் நூற்றாண்டு வரை உயிர்ப்புக்கு முன்பு ஆறு வார கால நோன்பு, உயிர்ப்பு தினத்தில் திருமுழுக்கு பெறுவோருக்கான ஆயத்த காலமாக கடைபிடிக்கப்பட்டது. இந்த நாட்கள் கிரேக்கத்தில் "டெர்ராகோஸ்டே" (terracoste) நாற்பது நாட்கள் என பொருள்படுகிறது. கி.பி. 4-ம் நூற்றாண்டில் இது முறைப்படுத்தப்பட்டு, சாம்பல் புதன்கிழமை தொடங்கி ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக உள்ள நாற்பது நாட்கள் லெந்துகாலமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்த லெந்து காலங்களை பொருள் பொதிந்ததாகக் கடைபிடிக்க, கடவுள் தரும் வழிகாட்டுதல்களை இறை வார்த்தைகள் வழியாக அறிந்துகொள்வோம்.

## நல்லுணர்வு பெறும் காலம் (Time of Good consciousness)

அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கி விடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும் அல்லவோ உண்மையான உபவாசம். (ஏசாயா 58:6).

உள்ளத்து உணர்வுகளே மனிதனை இயக்கும் உந்துசக்தி. லெந்துகாலம் நல்ல உணர்வுகளை பயிரிட்டுக்கொள்ளும் காலமாக அமையவேண்டும். எரேமியா 34:8-16-ல் அடிமைப்படுத்தப்பட்டோர் விடுதலை செய்யப்படவேண்டுமென்பதை விதைக்கிறார். ஏசாயா 56:6-ல் அதைத்தான் பார்க்கிறோம். லெந்துகாலம் நம்மை ஒறுத்து ஒடுக்கும் காலம். வெளிவேட உபவாசத்தால் பலனில்லை என்பதை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மத்தேயு 6:16-18-ல் விளக்குகிறார். உடலை வருத்தி உபவாசம் கொள்வோர், பிறரை வருத்தி தீமை செய்வதால் பிரயோஜனம் என்ன? உண்ணாமல் இருப்பது உபவாசம் அல்ல, உணர்வடைவதுதான் உண்மையான உபவாசம்.

### நல்லுறவு நாடும் காலம் (Time of seek good fellowship)

பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம். (ஏசாயா 58:7)

உறவுகளே மனிதனை இயக்கும் உந்துசக்தி. இன்று உறவுகள் கானல் நீராய் மாறிப்போன உலகம். அண்டை வீட்டாருடன் அன்பை வளர்க்க மறந்தவனுக்கு, முகமறியா நண்பர்கள் ஏராளம் முகநூலில். இது நல்ல உறவுகளை புதுப்பித்துக் கொள்ளும். மத்தேயு 5 மலைப்பிரசங்கத்தில், உன் சகோதரனோடே ஒப்புரவாகி பின்பு உன் காணிக்கை செலுத்து என்றும், உன் எதிராளியோடே நல்மனம் பொருந்து என்றும், உங்களை சிநேகிப்பவர்களை சிநேகிப்பதால் என்ன பலன்? என்றும் உறவுகள் மேம்பட, வளர ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அழைக்கிறார். உண்ணாமல் இருக்கும் உற்றாரின் உணவுப்பசியைத் தீர்ப்பதுதான் உண்மையான உபவாசம்.

### நல்லுயர்வு அடையும் காலம் (Time to seek good promotion)

உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும், கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும். (ஏசாயா 58:8)

மனம் வருந்தி, உள்ளத்தை ஒடுக்கி இறைவனிடம் நல்லுணர்வு பெறும்போதும், எளியோருக்கு உதவி செய்து, உற்றாருடன் உறவைப் பேணிப் பாதுகாத்து, எதிராளியிடம் பகை மறந்து ஒப்புரவாகி நல்லுறவு நாடும்போது, நம் வாழ்வின் நல்லுயர்வை நல்லாயர் உறுதிப்படுத்துகிறார். அதுதான் நீதி உனக்கு முன்னாலே செல்லும், கர்த்தருடைய மகிமை பின்னாலே காக்கும் என்று பார்க்கிறோம். மோசே, தானியேல், எஸ்தர் இன்னும் கர்த்தருடைய மனிதர்கள் பலர் உண்மையான உபவாசத்தின் மூலம் உயர்வைப் பெற்றதை திருமறையில் பார்க்கிறோம். அதைத்தான் ஏசாயா 58:8,11,12 ஆகிய வசனங்களில் உன் வெளிச்சம், சுகவாழ்வு, உன் நீதி, ஆத்துமாவின் திருப்தி, நீர்ப்பாய்ச்சலான தோட்டம், வற்றாத நீரூற்று போன்ற அருட்கொடைகளை உள்ளான மனிதனில் உயரும்போது ஆண்டவர் அருள காத்திருக்கிறார்.

மீட்பின் காலமாகிய இந்த காலங்களை சடங்காய் நிறைவேற்றாமல், உண்மையான உபவாச நிலைகளை உணர்ந்து நிறைவேற்ற அழைக்கப் படுகிறோம். இதனை நல்லுணர்வின் காலமாக, நல்லுறவின் நடக்கையாக, நல்லுயர்வின் வாய்ப்பாக பயன்படுத்துவோம். லெந்துகால அனுபவம் நாற்பது நாட்களில் முடிந்துவிடும் அனுபவமாக அல்ல, நம் வாழ்க்கை முழுவதும் தொடர்வதாக அமைய தூய ஆவியர் துணை புரிவாராக. ஆமென்.

ஆண்டவரின் அருட்பணியில்
அருட்பணி. எ.ஜெம்சன் ஜெபசிங்.
உதவி போதகர், இராஸ் அல் கைமா.

# செயலர் மடல்

ஆதியிலே வார்த்தையாயிருந்தவரும், வார்த்தை வழியாய் வந்தவரும், வார்த்தையினாலே தூய்மையாக்கி, பெலப்படுத்தி, உருவாக்குகிறவரும், குணமாக்கி உயிர்ப்பிக்கிறவரும், சீக்கிரமாய் வரப்போகிறவருமாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவின் மகிமையான நாமத்தில் வாழ்த்துகிறேன்.

வசந்தகாலத்தில் மரம், செடி, கொடிகளில் துளிர்கள் காணப்படுவதுபோல, ஆன்மீக வாழ்வில் நாமும் பசுமையுடன், பரிசுத்தமுடன், தூய்மையுடன் துளிர்விட்டு தூயவர் இயேசுவுடன் நெருங்கி வாழ்ந்திடுவோம். அவர் பரிசுத்தம் நித்தம் காத்து வாழ்ந்திடுவோம். நாற்பது நாள் மட்டுமல்ல, நம் வாழ்நாளெல்லாம் இயேசுவுக்காய் வாழ்ந்து, மகிபன் இயேசுவின் திருநாமத்தை உயர்த்துவோம். உதடுகளில் எப்போதும் துதியின் கனியும், கரங்களில் கர்த்தருடைய சத்திய வேதமும், நித்தியர் இயேசுவோடு நித்திய ராஜ்யம் போய் வாழும் நல்ல வாஞ்சையோடு, நித்தியர் இயேசுவின் பொன்முகம் காணும் வாஞ்சையோடு, லெந்து என்னும் வசந்த காலத்தில் மட்டுமல்ல, எப்போதும் இலக்கை நோக்கித் தொடர்வோம். பொன்னிலும் மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதாய் இருக்கிற கர்த்தருடைய வேதத்தை வாஞ்சையோடு வாசிப்போம். நேசிப்போம்.

பெரோயா பட்டணத்தாரைப் போன்று மனோவாஞ்சையாய் ஏற்றுக்கொண்டு மனதில், இருதயத்தில் பதித்துக் கொள்வோம். கர்த்தர் அருளிய வேதம் இருதயத்தில் இருக்கும்பொழுது கால்களுக்கு தீபம் மட்டுமல்ல, நடைகள் பிசகாதபடி நம்மைப் பாதுகாக்கும்.

Annual Exam எழுதும் நம் பிள்ளைகள், 10th, 12th Board Exam எழுதும் நம் பிள்ளைகள் யாவருக்காகவும் தொடர்ந்து ஜெபிப்போம். மார்ச் 27-ம் தேதி முதல் நடைபெற இருக்கும் VBS நிகழ்வுகளுக்காக, பெங்களூரிலிருந்து வரவிருக்கும் VBS Directors, நமது Inhouse VBS Director Mrs.Cynthia Enoch அவர்களுக்காக, VBS Teachers, VBS Volunteers-களுக்காக, Bus வசதி மற்றும் போக்குவரத்து வசதிகளுக்காக தொடர்ந்து ஜெபிப்போம்.

நமது சபை சார்ந்த அனைத்து ஊழியங்களுக்காக (Junior Church, Cornerstone, Youth Fellowship, Prayer Cell Meeting, Camp Ministry) ஜெபிப்போம். Al Quoz, Sonapur ஆகிய இடங்களில் நடைபெறும் Camp ministry ஊழியங்களுக்காக, Sponsor செய்து உதவி செய்யும் குடும்பங்களுக்காக ஜெபிப்போம். தேவனைத் துதிப்போம்.

துபாய் மாதிரி கிராமம் கொளகூர் மருத்துவமனை பணிகளுக்காக, ஆத்ம பாரத்தோடு குடும்பமாக அங்கு தங்கி மருத்துவப்பணி செய்துவரும் Dr.Samuel Delightson மற்றும் அவர்களோடு மருத்துவப்பணியைச் செய்துவரும் டாக்டரம்மா அவர்களுக்காகவும் ஜெபிப்போம்.

நமது சபை தாங்கும் மிஷனெரி ஸ்தாபனங்கள் மூலம் இந்தியாவில் பற்பல மாநிலங்களில் 100 மிஷனெரிமார்கள் செய்துவரும் ஊழியங்களுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காக, பிள்ளைகளுக்காக, பாதுகாப்பு மற்றும் தேவைகளுக்காக ஜெபிப்போம்.

நெடுநாளாய் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும், விரும்பினது வரும்போதோ ஜீவவிருட்சம்போல் இருக்கும். நீண்ட காலங்களாக CDA மூலம் அனுமதி பெறுவதற்காக திருச்சபையாக நாம் எடுத்துவரும் முயற்சிகளை கர்த்தர்தாமே மனமிரங்கி நல்ல செய்திகளைக் கிடைக்கச் செய்வாராக. விசுவாசத்தோடு தொடர்ந்து ஜெபித்து வெற்றி பெறுவோம்.

தேவனே நன்மையாக முன்நின்று நடத்தி ஜெயம் தருவார்.
தேவனாலே எல்லாம் கூடும்.

Praise be to God.

Babu Jeyaseelan, Secretary.

## NEW MEMBERS LIST

| No | Name | Mem. No. | Area |
|---|---|---|---|
| 1 | Mr. D.Deva Salben | 2958 | Dubai |
| 2 | Mr. Senthivel Chermadurai | 2959 | Dubai |
| 3 | Mr. Immanuvel Thangaiah | 2960 | Dubai |
| 4 | Mr. Ajay Jobin J. | 2961 | Dubai |
| 5 | Mr. Walter S.J. | 2962 | Dubai |

# நீங்கள் கிறிஸ்தவரா...

"சஞ்சலத்தோடு கூடிய அதிகப் பொருளிலும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடு கூடிய கொஞ்சப்பொருளே உத்தமம்." நீதிமொழி. 15:16

அண்ட சராசரத்தில்
ஆருயிர் இனங்களுக்கும்
ஆழப் பெருங்கடலில்
வாழும் இனங்களுக்கும்
வானத்து பறவை
வகைகளுக்கும்
இதுகாறும் உணவு
ஈன்று தந்தருளும்
தயாபரனே.. தந்தையே
இயேசுகிறிஸ்துவே..
உலகினை உய்விக்க
ஊடுருவி வந்தவரே!!
எளியவர்க்கு கருணை
பாத்திரமானவரே!!
கதிரவன் எழுவதும்..
விழுவதும்..
முழு நிலவின்
குளுமைக்கெல்லாம்
சொந்தமானவரே...
தேவாதிதேவனாம்
ஆதிபரம்பொருளே..
"அறுப்பு மிகுதி
வேலை ஆட்களோ
கொஞ்சம்" மத்.9:37
பூமியதிர்ச்சி, பூமியில்
மாசு சுற்று சூழல்
பூமியைச் சூழ்கிறதே
பருவநிலை மாறுகிறதே
யுத்தங்கள் சூழ்கிறதே
பஞ்சங்களும்
கொள்ளை நோய்களும்
கொடூரமாகுதே..
பக்தனே பயமா?
பரிசுத்தர் இருக்க
பயமா.. என்ன?
முகில் விலகி கதிரவன்
வெளிவருவதுபோல்
"நினையாத நாளிலும்
அறியாத
நாழிகையிலும்
அவர் வருவார்
தக்க தருணம்
தரணியில்
கர்த்தர் வருவார்"
பொருளாசை ஒருவரை
ஆக்ரமித்தால்
பின்பு...
ஊணும் உறக்கமும்
மறக்கும்
பணம் பணம் என
எண்ணம்
பதைபதைக்கும்
சஞ்சலம் சாய்ந்து
உள்ளத்தை
வதைக்கும்
ஆசாபாசம்
சோகமெல்லாம்
மனித இயல்பே.
எனிலும் பேராசை
பெரும் நஷ்டம்.. அது
கஷ்டம்தானே!!
வந்தடையுமே!
கிடைக்கும் பொருளே
கொஞ்சமோ...
இவையாவுமே
கர்த்தரால் வந்தது
என்ற பயபக்தியே
உத்தமம்.
பற்றுக பற்றுக
பரமபிதாவை
பற்றற பற்றுக!
சர்வ ஐஸ்வரியமும்
பெறுவர் நிச்சயம்
சகோதரரே
காது கொடுத்து
கேட்பீர்
நமக்கு மேலே
இறை இயேசு உண்டு
என்ற எண்ணமோ
எப்போதும்...
இருதயத்திலிருப்பது
இருளில் விளக்கு
போலாகுமே...
எவ்வித எதிரியையும்
மன்னிப்பதே என்ற
ஆயுதமே- உலகை
வெல்லும் ஒரே
ஆயுதமாகுமே.
கண்ணுக்குத் தெரியாது
காற்று எங்கும்
இரண்டற கலந்து
இருப்பதுபோல்
கர்த்தர் எங்குமே
நிறைந்து இருக்கிறார்
அருள் இறையே
ஆண்டவர் இயேசு
இல்லார்க்கு
ஈந்தல் முறையே
தன்னைத் தாழ்த்தும்
அடியார்க்கு
துணையே...

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# தவக்காலம் மனம் மாறும்

ஆவியும் மாம்சமும்
மனிதனை இயக்கும்
ஆவியோ தேவாம்சம்
மாம்சமோ மாற்றாம்சம்

நித்தியம் யுத்தமயம்
மாம்சமும் ஆவியும்
உத்தமச் சத்தியமும்
தப்பித மாக்கிடும்

பாவமும் சாபமும்
சுவராய் எழும்பும்
தேவனையும் மனிதனையும்
பிரித்தே வைத்துவிடும்

தேவாசீர் வாதமும்
தூரத்துக் கனாவாகும்
தேவையில் தணரும்
திருப்தியில் திகைக்கும்

இரவும் பகலும்
இயேசுநாள் நாப்பதும்
இருந்தார் வனாந்திரம்
இடைவிடா உபவாசம்

சக்திபெற்ற இயேசுவை
புத்திகெட்ட சாத்தானோ
சிக்கவைக்கும் கேள்விகளால்
சாய்த்துவிடச் சதிசெய்தான்

அப்பாலேபோ சாத்தானே
குப்பெனக் கொப்பளித்தார்
தப்பாமல் வசனத்தால்
விளாசித் தள்ளினார்

அழுகை யோடும்
உபவாசத் தோடும்
முழுஇருதயத் தோடும்
புலம்ப லோடும்

இப்பொழுதே இறைவனிடம்
திரும்பி வாருங்கள்
ஒப்பிலா கர்த்தர்வாய்
உள்ளம்உருகி அழைக்கிறது

இரக்கமும் உருக்கமும்
நீடிய சாந்தமும்
கிருபையும் இருக்குதாம்
தீங்கெனில் தாங்காதாம்

ஆவியின் பலனையும்
அனுதின நலனையும்
தேவனே தருகிறார்
மனந்திரும்பும் தினம்விருந்தாம்!

ஆதாரங்கள் : கலாத்தியர் 5:17

கவிதை எண் : 257

ஆக்கம் : மணிமுத்து.

# திருச்சபை ஜெபநாள் 05-03-2023 (முதல் ஞாயிறு)

"கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேளும்,
என் கூப்பிடுதல் உம்மிடத்தில் சேர்வதாக." சங்கீதம் 102:1

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும் சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும் மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- ★ கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- ★ தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- ★ திருச்சபையின் அனைத்து ஊழியங்களும் சிறப்பாக நடைபெற கர்த்தர் கிருபை பாராட்டினார்.
- ★ கடந்த மாதத்தில் நடைபெற்ற திருச்சபையின் அனைத்து ஆராதனைகள், Prayer cell ஜெப ஐக்கிய கூடுகைகள், திருச்சபை மூலம் ஒவ்வொருவாரமும் நடைபெற்றுவரும் ஊழியங்கள் யாவும் சிறப்பாக நடைபெற கர்த்தர் பாராட்டின தயவிற்காக கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- ★ நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- ★ நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- ★ நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- ★ திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- ★ திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- ★ சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- ★ நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷெனெரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷெனெரி ஸ்தாபனங்களுக்காக,
- ★ தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக,
- ★ கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- ★ இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- ★ அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்து மக்களின் சமாதானத்துக்காக,
- ★ உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக,

## நமது ஜெப மன்றாட்டுகள்

- ★ இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் தேவ கிருபைக்காக,
- ★ நமது குடும்பங்களின் தேவைகளுக்காக மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- ★ வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- ★ திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக,
- ★ அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்.
- ★ பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- ★ குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- ★ உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.
- ★ கல்வி கற்றுவரும் எல்லா மாணவர்களுக்காகவும் , உயர்கல்விக்காக ஆயத்தப்படும் பிள்ளைகள் ஏற்ற கல்வி பெற்று வாழ்வு உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.
- ★ கர்த்தர்தாமே யாவரையும் எல்லாவிதமான நோய்களுக்கும் விலக்கி தம் செட்டைகளின் மறைவில் பாதுகாத்து நடத்தவும், புதிய வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் யாவருக்கும் நல்ல வேலைவாய்ப்பைத் தந்து நடத்தவும் ஜெபிப்போம்.
- ★ 10th, 12th Board Exam எழுதிக்கொண்டிருக்கும் நம் பிள்ளைகளுக்காகவும், Annual Exam எழுத ஆயத்தப்படும் எல்லா பிள்ளைகளுக்காகவும் ஜெபிப்போம்.
- ★ VBS ஆயத்தப்பணிகளுக்காக ஜெபிப்போம்.

"கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்,
அவர் கிருபை என்றுமுள்ளது." சங்கீதம் 107:1

**நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும்,
பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள்
தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக
தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.**

## பெரியோர்களுக்கான வேதவினா போட்டி

(எரேமியா 1-16)

கீழ்கண்ட வினாக்களுக்கு எரேமியா 1-16 அதிகாரங்களிலிருந்து விடைகளை எழுதி 20-ம் தேதிக்குள் போதகருக்கு அனுப்பினால், அனைத்து வினாக்களுக்கும் சரியான விடை எழுதுபவர்களின் பெயர் தூதன் புத்தகத்தில் வெளியிடப்படும்.

1. நான்கு விதமான வாதைகளைக் குறிப்பிடுக.
2. எவைகளின்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்?
3. அலைகள் மேற்கொள்ளாதபடி - கடக்கக்கூடாதபடி கர்த்தரின் நித்திய பிரமாணம் என்ன?
4. ............ உனக்கு விரோதமாக ...................., ஆனாலும் உன்னை ................., உன்னை ................ நான் .................. இருக்கிறேன் என்று ....................... சொல்லுகிறார். நிரப்புக.
5. வேளையை, காலத்தை அறிவது எவைகள்? கர்த்தருடைய ஜனம் அறியாமற்போனது என்ன?
6. எருசலேமின் தெருக்களிலே, வீதிகளிலே யாரைத் தேடவேண்டும்?
7. கர்த்தருடைய ஜனங்கள் இரண்டு தீமைகள் குறிப்பிடுக.
8. மெய், மெய்யே குறிப்பு எழுதுக.
9. கர்த்தருடைய கண்கள் எதன்மேல் நோக்கமாயிருக்கிறது? எவைகள் மறைவாயிருப்பதில்லை?
10. “பூர்வ பாதைகள்”, “நல்லவழி”, “ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல்” வசனக்குறிப்பு எழுதுக.

Bro.I.சைமன்,
சபை ஊழியர்.

## பிப்ரவரி 2023 வேதவினா போட்டிக்கான சரியான பதில்கள்

1. மகிழ்ச்சியாய் நீதியைச் செய்கிறவர்களையும், கர்த்தருடைய வழிகளில் கர்த்தரை நினைக்கிறவர்களையும் சந்திக்கிறார். ஏசாயா 64:5
2. ஏசாயா 62:4-5
3. கர்த்தருடைய நீதி, கர்த்தருடைய இரட்சிப்பு ஏசாயா 51:8
4. சுகவாழ்வு, உன் நீதி, கர்த்தருடைய மகிமை ஏசாயா 58:8
5. சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே ஏசாயா 66:2
6. ஏசாயா 51:1,2
7. விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லை என்று ஏசாயா 59:16
8. ஏசாயா 54:10
9. ஏசாயா 66:22
10. ஏசாயா 57:15
11. ஏசாயா - 66 அதிகாரம் - சத்திய வேதத்தின் சத்தியங்கள், சத்துவங்கள் யாவையும் தன்னகத்தே கொண்டது. "ஏசாயா"

## பிப்ரவரி 2023 வேதவினா போட்டி சரியான பதில் எழுதியவர்கள்

1. திருமதி. டயானா ரூபன்
2. திருமதி. அனித்தா ஆல்வின்
3. திருமதி. சாந்தினி ராஜன்
4. திருமதி. புனிதா தாஸ்
5. திருமதி. செலினா அசோக்
6. திரு. V.மோகன்
7. திருமதி. ஷெர்லி சாம்ராபின்
8. திருமதி. நிர்மலா பேட்ரிக்
9. திருமதி. செல்லா ஆலன்
10. திருமதி. லீதியா ஆல்வின்
11. திருமதி. கவிதா நிஷோர்
12. திருமதி. மெர்லின் விஜில்
13. திருமதி. ஜெனிஸா சுந்தர்
14. திருமதி. இனிதா ஜோனா
15. திருமதி. ஷாமினா பென்னி
16. திருமதி. சத்திய வினோதா கிறிஸ்டோபர்
17. திருமதி. ஜெயகிருபா சாலொமோன்
18. திருமதி. ரோஸ்லின் ஜெயக்குமார்
19. திருமதி. ஜான் பெமி குமாரி டார்வின்
20. திருமதி. ஜெமிமா கிறிஸ்றோபல் அபிலாஸ்

# தெரிந்து கொள்வோம்

பாடல் பிறந்த வரலாறு - பாமாலை

பரி.பெர்னார்டு க்ளெர்வோ



பெர்னார்டு க்ளெர்வோ அவர்கள் 1090-ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் பர்கண்டி மாகாணத்தில் பாண்டேயின் என்னும் கிராமத்தில் ஒரு பிரபு குடும்பத்தில் பிறந்தார்.

பெர்னார்டு அவர்கள் தனது 22-ம் வயதில் பிரான்ஸ் நாட்டில் பிறந்தார். அங்கு கிரினோமர் மலைப்பகுதியில் லாகிராண்டி சாட்ரூஸ் என்னும் இடத்தில் இயற்கை அழகு மிகுந்த ஆசிரமம் இருந்தது. பெர்னார்டு அவர்கள் இந்த மடத்தில் சேர்ந்து தனது திருப்பணியை ஆரம்பித்தார்.

பெர்னார்டு அவர்கள் ஆசிரமத்தில் சேர்ந்த மூன்று ஆண்டுகளுக்குள் அவரது அயராத உழைப்பினாலும், முன்மாதிரியான வாழ்க்கையினாலும் அநேகர் ஆசிரமத்தில் வந்து சேர்ந்தனர். ஆசிரமம் மிகவும் முன்னேற்றமடைந்தது. பெர்னார்டு அவர்களுக்கு பல உயர் பதவிகளும், பரிசுகளும வழங்கப்பட்டன. ஆனால் அவைகளையெல்லாம் அவர் மறுத்து தன் வாழ்க்கை முழுவதையும் இறைப்பணி செய்வதில் செலவிட்டார்.
பெர்னார்டு அவர்கள் தினமும் குதிரையில் சவாரி செய்து ஆசிரமத்திற்குச் செல்வது வழக்கம். ஆயினும் மலைப்பிரதேசமான அந்த இயற்கைக் காட்சிகளை அவர் கண்டுகளிக்கவில்லை. ஏனெனில் அவர் மனதில் எப்போதும் ஆவிக்குரியவைகளே நிரம்பியிருந்தன. எப்போதும் பரலோக ராஜ்ஜியத்தைக் குறித்து தியானம் செய்துகொண்டிருப்பார். அப்படி தியானம் செய்து கொண்டிருக்கையில் சங்கீதம் 104:34-ல் தாவீது அரசன் பாடின வரிகள் மனதில் வந்தது. “இயேசுவே உம்மை தியானித்தால்” என்ற பாடல் மனதில் உருவாயிற்று. இப்பாடல் முதலில் லத்தீன் மொழியில் எழுதப்பட்டு திரு.எட்வர்டு காஸ்வால் என்பவரால் 1850-ம் ஆண்டு ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது.

பெர்னார்டு அவர்கள் தனது வாழ்க்கை முழுவதையும் ஆசிரமத்திலே செலவிட்டார். பல நூற்றாண்டுகளுக்குப்பின் மார்டின் லூதர் அவர்கள், பரி.பெர்னார்டு நான் கேட்டறிந்த கிறிஸ்தவ துறவிகள் எல்லாரையும் விட இவரே மிகச்சிறந்த பக்திமான் எனப் போற்றியுள்ளார்.

இயேசுவே உம்மைத் தியானித்தால் என்னும் பாடலைக் குறித்து Rev.டேவிட் லிவிங்ஸ்டன் என்னும் மிஷனெரி இப்பாடலானது ஆப்பிரிக்காவின் அகன்ற காடுகளில் நான் சுற்றித் திரியும்போது என் காதுகளில் தொனித்துக்கொண்டே இருக்கிறது. நான் மிகவும் பிரியப்படும் பாடல்களில் ஒன்று எனக் குறிப்பிட்டுள்ளார்.

பரி.பெர்னார்டு அவர்கள் எழுதிய பாடல்களில் முக்கிமானவைகள்

இரத்தம் காயம் குத்தும்
இவாதிபதி ஜோதியே

பரி.பெர்னார்டு அவர்கள் 1153-ம் ஆண்டு தனது 62-ம் வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

R.ஜெபர்சன்

## வருந்துகிறோம்

“கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்”

நமது சபையின் அங்கத்தினர்
Mr. Ashok அவர்களின் தகப்பனார்
Mr. Raja Selvan அவர்கள் கடந்த 09-02-2023 அன்றும்
நமது சபையின் அங்கத்தினர்
Mr. P.Jeyaseelan அவர்களின் தகப்பனார்
Mr. Ponnaiah அவர்கள் கடந்த 25-02-2023 அன்றும்
கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# BLOOD DONATION

Blood Donation

## Foods to eat and drink before donating blood

### Iron - rich foods

- Meats like: beef, lamb,
- ham. Poultry such as:
- chicken and turkey.
- Fish and shellfish, like: tuna,
- shrimp, clams.
- Organs such as: liver.
- Eggs, Spinach, sweet potatoes, peas, broccoli. Enriched white
- bread, whole-wheat bread,wheat, bran cereals.chikku, drumstick its leaves, dates, ragi etc..
- Strawberries, watermelon, raisons, dates,figs, prunes, Tofu, kidney, garbanzo, lentil

### Water

- During blood donation, your blood pressure can drop, leading to dizziness.
- Drink extra 2 cups, of water before donating blood.

### Vitamin C- rich foods

- Cantalou
- peKiwi
- Mango
- Papaya
- Pineapple
- Oranges
- Lemon
- All types of berries.
- Watermelon

## ✗ What to avoid ✗

**Alcohol**

**Aspirin**

For blood platelets donation

**Fatty foods**

**Iron blockers**

- Coffee, tea
- Chocolate
- Milk, cheese, and yogurt

## After donation

You'll be provided with a light snack and something to drink. This will help stabilize your blood sugar and fluid levels. Drink an extra 4 cups of water over the next 24 hours, and avoid alcohol.




By Mrs. Jerifa Vivek

## NEW ARRIVALS

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

**Master Ian Yatvik**

S/o.Mr.Saravanan & Mrs.Naomi

10-02-2023

**Master Aiden Joseph Deva Anbu**

S/o.Mr.Vijiesh & Mrs.Shakila Vijiesh

13-02-2023

# CHILDREN'S CORNER

Jehoash was the second of four kings who descended from Jehu to reign as king of Israel (Jehoahaz, Jehoash, Jeroboam II, and Zechariah).

*This month kids' corner concentrates on KING JEHOASH 12TH KING OF THE DIVIDED KINDGOM OF ISRAEL (2 KINGS 13:10-25, 14:1-16, 2 CHRO 25TH CHP). Answers should have reference.* ***Read, Search, Write.*** *Follow NKJV.*




**LEARN SOMETHING NEW :** 1ST CENTURY MIKVEH WITH INSCRIPTIONS FOUND : Construction crews discovered a mikveh, or ritual bathhouse, dating back to the first century C.E. The Israeli Antiquities Authority praised the "very significant discovery," calling it "rare and unique and most intriguing." The walls of the ritual bath were extremely well preserved, and vibrantly decorated with images of palm trees, boats, and other various symbols. An analysis of the materials revealed that the walls of the bath had been treated with plaster, which helped keep the site looking so well.

Mysterious inscriptions in cursive Hebrew script and the Aramaic language covered the walls of the mikveh.

Jehoahaz's son, who became king of Israel after him, was named Jehoash, also known as Joash. There was another man by the name of Joash. He was the son of Ahaziah the king of Judah. We have studied about Joash, the boy-king of Judah.

Jehoahaz's son we shall refer to as Jehoash also. He is called as Joash too!

## GRADE 3 TO GRADE 5 ANSWER THE FOLLOWING:

While King Joash of Judah was in his 37th year of reign, Jehoash the son of Jehoahaz became the next king of Israel. He was a king for 16 years. He was like the other kings and did not follow God's laws. He worshipped the golden calf that Jeroboam made.

Elisha was the prophet at the time and he was sick and would eventually die from this illness. Jehoash went to visit him and cried when he saw Elisha. Elisha told Jehoash to "Take a bow and some arrows. Put your hand on the bow." Elisha put his hands on top of Jehoash's hands. He told Jehoash to open the east window and shoot an arrow. Elisha told him that he would win against Syria and that he was to attack at Aphek and destroy them all. Then Elisha told him to use his arrows and hit the ground with them. Which Jehoash did but he stopped after three arrows.

Elisha was angry and said he should have shot 5 or 6 times! He could have destroyed Syria! But, since he only shot three times, he would only attack Syria three times.

King Hazael of Syria fought against Israel the whole time Jehoash was the king. God was watching over them and when Hazael died, and his son became the king, Jehoash was able to recapture some of the cities that had been lost in other battles. Jehoash won three battles against the Syrians.

During his second year of reign, Amaziah became the king of Judah . He won some battles which made him feel victorious and eager to fight against King Jehoash. Amaziah sent a message to Jehoash stating he wanted to face him in battle. But, Jehoash sent a story back as a reply.

It said there was a thistle in Lebanon that sent a message to the cedar in Lebanon "Give your daughter to my son as his wife." But a wild animal went by and trampled the thistle. Jehoash said "Be satisfied that you have conquered Edom! Stay home and don't cause fights that you will lose and take down Judah with you!"

But, Amaziah didn't listen and they went to battle. Jehoash won the battle and captured King Amaziah of Judah at Beth Shemesh. Jehoash went to Jerusalem and broke down the wall of Jerusalem 400 cubits from the Gate of Ephraim to the Corner Gate. He took all the gold and the silver and all the articles in the temple. He also took treasures from the king's house along with hostages and returned to Samaria.

When he died, his son Jeroboam became the king. He was buried with the other kings of Israel.

**FILL IN THE BLANKS :** 1) Jehoash went to visit _________.
2) Jehoash won _________ battles against the Syrians.
3) Elisha put his hands on top of Jehoash's _________.
4) Jehoash went to Jerusalem and broke down the wall of Jerusalem 400 cubits from the Gate of _________ to the _________.
5) He took all the ______ and the ______ and all the articles in the temple.

**CORRECT THE SENTENCE :** 1) Be satisfied that you have conquered Jerusalem. 2) He worshipped the golden fly that Jeroboam made.
3) He would only attack Syria four times.
4) Jehoash to open the south window and shoot an arrow.
5) Jehoahaz was twenty six years old when he became king of Israel.

**GRADE 6 TO GRADE 8** 1) When did the Moabites invaded the land?
2) How did Elisha could confidently say that King Jehoash can win Syrians 3 times?
3) What does the picture explains?



4) BEFORE ELISHA'S DEATH, HE GAVE A BLESSING TO JEHOASH.
What does the picture talk about ?



5) What does this picture say?



6) Name all the places in the given portion.
(clue : There are 8 places)

## GRADE 9 AND ABOVE

1) When did Jehoash reign Israel? Who was his father?
2) Explain Symbolic Arrow of Gracious Victory at Aphek?
3) Jehoash acknowledge through this metaphor that the Lord, through Elisha, was the real strength and power of Israel against all her adversaries. Which verse supports the statement.
4) Elisha was angry when Jehoash shot only three more arrows why?
5) How many bows did King Jehoash had with him?
6) Jehoash recovered cities of Israel. Is it true? How?
7) There is one great miracle explained in a single verse in this given portion. What is it?

***(Please send your answer to the pastor by 15th of this month)***

## Answers for the month of February 2023 (KING JEHOAHAZ 12TH KING OF THE DIVIDED KINDGOM OF ISRAEL [2 KINGS 13:1 - 9])

### GRADE 3 TO GRADE 5

### WORD SEARCH

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| B | C | H | A | R | I | O | T | S |
| I | G | W | G | N | O | P | K | N |
| T | O | K | Z | L | I | V | E | M |
| R | L | R | F | C | T | E | S | R |
| L | D | G | T | U | T | F | Y | T |
| H | E | X | O | N | C | I | R | E |
| S | N | B | E | P | J | N | I | G |
| Y | C | V | I | Q | T | M | A | N |
| O | E | V | E | K | S | T | F | A |
| S | P | L | E | A | D | E | D | N |

1) Seventeen 2) Pleaded 3) Chariots 4) Syria 5) Evil and Golden

## NUMBER GAME : SOLVE THE SUM AND WRITE WHAT DOES IT REPRESENT :

1) 50 = 50 horsemen
2) 17 = king for 17 years in Samaria
3) 10.000 = 10,000 - foot soldiers
4) 10 = 10 chariots
5) 23 = King Joash of Judah was in his 23rd year of reign, Jehoahaz the son of Jehu became the king of Israel.

## GRADE 6 TO 8 AND GRADE 9 AND ABOVE :

1) In the 23th year of Joash the son of Ahaziah, king of Judah, Jehoahaz the son of Jehu became king over Israel in Samaria. (2 KINGS13:1)
2) ABOUT ME : **King Jehoahaz**
   FATHER : **Jehu**
   MOTHER : **Not Mentioned**
   GRANDFATHER : **Jehoshaphat**
   SON : **Jehoash (2Kings 14:10)**
   PROPHET : **Elisha**
3) Jehoahaz did evil in the sight of the LORD, and followed the sins of Jeroboam the son of Nebat, who had made Israel sin. He did not depart from them. Then the anger of the LORD was aroused against Israel. His father Jehu also continued in the idolatry of Jeroboam (2 K10:31). Jehoahaz followed in the footsteps of both Jeroboam and his father Jehu (2 Kings 13:2).
4) Hazael king of Syria oppressed Israel all the days of Jehoahaz. God delivered them into the hand of Hazael king of Syria, and into the hand of Ben-Hadad the son of Hazael, all their days. So Jehoahaz pleaded with the lord, and the lord listened to him (2 Kings 13:3-4, 22, 23)
5) 1) Jehoahaz committed the same sins as his father Jehu committed
   2) Jehoahaz followed the sins of Jeroboam. Jehoahaz suffered the same punishment from God as his father suffered.
   3) He was continually oppressed by the Syrians.
   4) Jehoahaz did not turn from his evil ways.
   5) Because of Jehoahaz's sins God was against the Israelites.
   6) Jehoahaz and his people suffered for their sins.
   7) In his oppression Jehoahaz sought God for help.
   8) Jehoahaz asked for help because he and his people were victims of the Syrians.
   9) He neither asked forgiveness for his sins nor did he forsake them.

## Last (February) months Childrens Corner prize winner

**Correct answer Participants:**

**GRADE 3 TO GRADE 5** 1) Leonel Sam 2) Jonathan Calvin 3) Godwin Darwin 4) Eric Mic 5) Lydia Abigail 6) Katelyn Jolina Steward 7) Jonathan Solomon 8) Jerwin Jeyakumar 9) Tanya 10) Jessica Magdalene 11) Mark 12) Steve Hayden 13) Adora Binny 14) Jeholin Victo 15) Rigish Jobin

**GRADE 6 TO GRADE 8** 1) Lenofa Joy 2) Tiana 3) Trinita 4) Jasper Jeyakumar 5) Rithish Joel 6) Sarah Arul 7) Aaric Sam 8) Joanna Solomon

**GRADE 9 AND ABOVE** 1) Karen Singh 2) Gracelin 3) Sweety 4) Caroline Joshna 5) Jaymie Joseph 6) Jaymen Joseph 7) Hannah Arul 8) Jefflin Victo 9) Maisie Fedora 10) Jerson 11) Jenica Jebakumar

| | |
|---|---|
| January 2023 | Lydia Abigail |



# BIRTHDAY CELEBRANTS - MARCH 2023

## DUBAI

1 Mr. Andhria Lawrance
1 Mrs. Babitha Roy Manuel Selva Subin
1 Mr. P. Stanley Jones
1 Master Nathan Hanniel George
1 Mr. Jebin Victor Sam
2 Miss Abitha Ragesh
2 Mr. Edwin Russal Raj E.
2 Miss Sumitha Jacobraj
3 Mr. Christy Chandra Mohan
3 Mr. Deelan David
3. Mr. Daniel Francis
3 Miss Breonna Sunil
3 Master Neil Abhipray
4 Mr. A. Enoch Jebaraj
4 Master Freddy Manuel Sudhakar
4 Mr. J.Justin Robert Paden
4 Mrs. Janet Nelson D
5 Miss Daphne Michelle Lino Joel Singh
6 Mr. V. Jeya Kumar
6 Mr. C. Jeyasingh
6 Miss Fridolin Ebenezer Raj
6 Mrs. Merlin Nesakumari Vijil
6 Master Josiah Robinson
6 Master Ashley Jaden Samson Michael
6 Mrs. Minu Honeyla Sharon Paul
6 Mrs. Anlet Sherlin Ashwin
7 Dr. Alex Henry Hemanth Kumar
7 Master Jonah Gil Christ Julian
7 Master Rigish Jobin Kanagaraj Retinamony
7 Master Hubert Bernard Olive Sujin
7 Mr. Rajiv Jedidiah
7 Mr. Inbaraj N.
7 Mr. Vivin Augustin S.R.
8 Mr. T. Maragatham
8 Mrs. Pamela John David
8 Ms. Belinda Sharon Bright
8 Mr. C. Paul Durai
8 Mrs. Irene Paul Prabahar
8 Mr. Shajan Abrain Raj
8 Master Jeswin Immanuel Pravin Jeno
8 Mrs. Rosalyne Ramya Jayakumar
8 Master Jerwin Martin Wins
9 Mr. Jayapaul Sampath
9 Ms. Shanaya Shyam
9 Miss Evelien Jonna John Wesley

9 Mrs. Jeba Saranya Nimal Jose

9 Master Daren Jonath Barnabas

9 Mrs. Shibila Grace Oliver Morris

10 Mr. Wesley Paul C.

10 Master Fleming Gold Baskar

10 Miss Adina Anoop

10 Mr. Arul Emrold Peter

10 Mr. Koil Dhasan Paul Durai

11 Ms. Sharon Lavanya Andrew

11 Mrs. Remona Aswyn

11 Mr. Stalin Rajesh

11 Mr. Gladson Robinson

11 Miss Lydia Abigail Samrobin

11 Miss Bianca Elsa Billy Joseph

11 Master Timothy Bener Kim

11 Miss Eva Jessie Samuel Lecourt

12 Miss Prevana Shankar

12 Master Rhony Isaac

13 Mr. Jason J. Anand

13 Mrs. Jensi Sam Ranjit

13 Master Jeffrey Rhenius Jebakumar

13 Mr. Godwin Devasir Michavel

13 Mrs. Shiji Vijai Lal

13 Master Remuel Samuel

13 Master J.R. Joshua Jose

14 Mr. J.Vethanayagam Jeyaraj

15 Mrs. Jenifer Jasmine Catherine Simson

15 Master Farry Braxton Jeya Chandra Moses

15 Mrs. Famila Praveen Charles

15 Master Jotham Theophilus Harold Packiaraj

15 Miss Jaspherin Femina Arul Selva Febin

15 Mr. Israel Stephen

16 Dr. Abisha Sharon James Kumar

16 Miss Deshna Joan Ranjit Sam

16 Mr. John Isravel

16 Mrs. Udaya Geetha Mohan

16 Miss Amy Smirna Benjamin Arul

17 Mrs. Ivory Russal

17 Mr. Satish Daniel

17 Master Shanrin Oliver Gebin

17 Miss Denitta Merfil Delvin Dennis

17 Master Yohannan Jayasundar S Babu

18 Mr. Charles Spurgeon Simon

18 Ms. Chrislyn Stephanie Raja Retnam

18 Mrs. Jasmin Samson Rajan

18 Master Bennet Stevenson Singh
18 Mr. T. Jose Albin
18 Mr. S.Benet Raj
18 Mrs. Monika Sharvin
18 Master Sherwin Paul Brysen Babu
19 Mr. Jerush Jonah
19 Mr. L. Sam Lawrence
19 Master Sean Steven Johnson
19 Mr. V.C.Suresh
19 Master Pete Cedric Sherwin Prince
20 Mr. Manoj Kumar Balan
20 Master Caleb Collins
20 Master Kevin Jaffe Kumar
20 Miss Jessica Joanne Johnson
20 Miss Ivanna Michelle Samnath
21 Mr. Vijay Daniel
21 Ms. Analine Jovita Godwin
21 Master Nathaniel Lambert
22 Mrs. Poorna Viola Vairavanathan
22 Miss Vinila Vijay Kiran
22 Mrs. Andrin Rafealla Staline
23 Mrs. Ponn Jeba Lidya Jeyasingh Noble
23 Mr. R. Inbakumar
23 Mrs. Jerlin Sheeja Prabin Russel
23 Mrs. Ajitha Sweety Balin Suresh
23 Mr. Jeya Chandra Moses
24 Mr. Manuel K. Mani
24 Mrs. Patricia Bensam
24 Miss Antrina Jessica Arun Raja
24 Miss Keren Tessa Ashok Raj
25 Mrs. Sooriabai Roseline Herbert
25 Mr. S. Thishon John Ravi
25 Miss Angelina Christy Arul Raj
25 Mrs. Annathai Teressa Jeyakumar
25 Mr. S.Harris Johnson
25 Mr. J.Johnson Jebaraj
25 Mrs. Kiruba Johnson
26 Mr. Ezekiel Samuel
26 Mr. Priyachand Suthan Sishya
26 Mr. Kingsly Fernandez
27 Mrs. Valantina Margaret Chellappa
27 Master Tamilinian Baston Jain Durai
27 Mr. Jaison Thangadurai
27 Miss Breana Derek
28 Mrs. Priya Rachel Singh Ratnam
28 Mr. M. Chellaiah Jebaraj
28 Master Godwin Kiran Anbu Selvan
28 Master Kelvin Sutherson Babu
28 Mr. S. Samuel
28 Master Jason Arul

28 Master Nathaniel John Jebakumar N
28 Mrs. Vincy Arul Selva Febin
28 Mrs. Praveena Mallikarjun
29 Mr. S. Raja Retnam
29 Miss Daryl Gianna Rajeshwararaj
29 Mr. Abilash Sam Charles
30 Master Jeba Vincent Paul Selvam
30 Mr. N.D.N. Dhas
30 Mrs. Juri Reagan
31 Mr. M. Baktha Seelan
31 Mrs. Chandra John
31 Mrs. Shakila Vijiesh
31 Mrs. Esther Edwin
31 Mrs. Nineeta John
31 Miss Irene Rathna Rajan

## FUJAIRAH

1 Mrs. Josephine Sunitha Sam Rohit
2 Miss Joycelin Deborah Benito
5 Mr. Justin Prabhakaran
5 Mrs. Santhi Star Jayaseelan
7 Miss Amy Fiona Jenson
8 Master Shijoe Raj Navaneetha Kannan
9 Mr. K. Johnson
9 Mr. Nelson Sathya Jeyakumar
12 Mrs. Mercy Ponpushpam Johnny Martin
13 Mrs. Suja Vijaya Kumar
13 Mr. A. Ambrose John Stephen
13 Mrs. Reshmi Gandhi Raja Joseph
17 Miss Penisha Nir Joe Joseph
18 Mr. C. Daniel Abraham
21 Mrs. Jeruba Sweetline Selvaraj
21 Master Bala Paulmani
23 Master Elgine Delight Pannir Selvam
26 Mrs. Suganthy Charles
28 Mr. Bensingh Joshua Jayasingh
30 Mr. Jason
30 Mrs. Prem Kezia Benito

## RAS AL KHAIMAH

2 Mrs. Baby Ethal Suba Boss
3 Mrs. Shoba Prem Regin Bernard
3 Mr. Ranjith T.
4 Mrs. Remya Dev Justin Devakumar
6 Mr. Aneesh C.
7 Master Joel Paul Stephen
9 Mrs. Jeyaseeli Santhosh
9 Dr. Rachel Jeba Sharon Robin
12 Mr. Job Jeyachandran

13 Mr. George Raja Singh

13 Miss Monisha Moorthy

15 Mr. D.Selvan

15 Master R.V.Ansto

16 Mr. Gnana Prakash Paul Daniel

16 Mrs. Shanthi David Raja Selvan

16 Mrs. Soja Lawrence

16 Master Merlin Jose Daniel Sunderraj

17 Master Joseph Jovin Deva Prakash

17 Mrs. Sudha Hepsiba Nelson

18 Mrs. Rabitha Yesupatham

19 Master Miraclin Raj

Rajesh Paramanandam

23 Miss Gabrilin Shasmitha Ujinraj

25 Master. Adrin Dev Justin Deva Kumar

26 Master Osborn Rufus Ezra George

26 Master Adriel Darren Sam

## WEDDING ANNIVERSARY CELEBRANTS - MARCH 2023

### DUBAI

21 Mr. & Mrs. M. Earnest Anbu Devan

25 Mr. & Mrs. M. John Suresh

### RAS AL KHAIMAH

7 Mr. & Mrs. Henry Lawrence

7 Mr. & Mrs. Ujinraj Kanakaraj



# ஆராதனை பாடல்கள் - மார்ச் 2023

| | | |
|---|---|---|
| ஆரம்ப கவி | : | இந்த அருள் காலத்தில் |

**05-03-2023**

| | | |
|---|---|---|
| பாமாலை | 6 | உன்னதம் ஆழம் |
| பாமாலை | 34 | பிதாவே மா தயாபரா |
| கீர்த்தனை | 36 | கண்களை ஏறெடுப்பேன் |
| கீர்த்தனை | 35 | சீர்திரியேக வஸ்தே |
| பாமாலை | 199 | இயேசுவை நம்பி |

**12-03-2023**


| | | |
|---|---|---|
| பாமாலை | 135 | உந்தன் சொந்தமாக்கினீர் |
| பாமாலை | 23 | என்னோடிரும் மா நேச கர்த்தரே |
| கீர்த்தனை | 111 | பாவியாம் எனை மேவிப்பார் |
| கீர்த்தனை | 119 | கிஞ்சிதமும் நெஞ்சே |
| கீர்த்தனை | 121 | விசுவாசியின் காதில் பட |
| கீர்த்தனை | 34 | சருவலோகாதிபா |

**19-03-2023**

| | | |
|---|---|---|
| பாமாலை | 103 | எவ்வண்ணமாக கர்த்தரே |
| பாமாலை | 95 | இயேசுநாதா காக்கிறீர் |
| கீர்த்தனை | 132 | எல்லாம் இயேசுவே |
| கீர்த்தனை | 134 | தேன் இனிமையிலும் |
| பாமாலை | 127 | அருள் மாரி எங்குமாக |

**26-03-2023**

| | | |
|---|---|---|
| பாமாலை | 155 | சர்வத்தையும் அன்பாய் |
| பாமாலை | 100 | பாவி கேள் உன் ஆண்டவர் |
| கீர்த்தனை | 161 | என்னை ஜீவ பலியாய் |
| கீர்த்தனை | 165 | விந்தை கிறிஸ்தேசு ராசா |
| கீர்த்தனை | 159 | என் சிலுவை எடுத்து |
| கீர்த்தனை | 182 | வீராதி வீரர் யேசு |





Mini Bible Character Study Book

# Getting Your Spiritual Wellness Back to 100%

PRIYA SINGH

It's a good idea to do a **spiritual wellness checkup** each year to see if there are any areas of your life that are out of alignment or lacking.

Like changing the oil on your car and doing routine maintenance on home appliances, you should regularly be assessing your spiritual wellbeing and adjusting when areas get out of balance.

Do you have **spiritual blind spots?**

## # 1 QUIET TIME / SOLITUDE

God won't shout over the television and social media. If you want to be spiritually balanced and hear from God, you've got to get away to quiet places each day.

Learning to be content in solitude is a spiritual discipline and an important part of a spiritual wellness lifestyle. Its many benefits include calming our minds, hearing God, and taking time to reflect on what's important in life.

## # 2 MEDITATION AND REFLECTION

Taking the time to meditate on God's word, a message you heard, or reflect on what you are learning about God ensures that the understanding goes deep and changes you.

It's like letting the good things you get from God digest and nourish you spiritually.

## #3 ATTITUDE TOWARD OTHERS AND RELATIONSHIPS

God reminds us over and over in the Bible that our attitude toward others should be love.

Someone once said that the way we treat the least important or least-loved person in our life is the way we treat God.

Offer and accept forgiveness. Make amends. Ask for forgiveness or sort out a misunderstanding you had with someone. Think the best of others. Give the benefit of the doubt. Try to be understanding when someone is less than loving toward you.

## # 4 PRAYER AND LISTENING

We can't do all the talking! So make time for more silence and listening during your prayer time, after all–He already knows what you need! Listen to Him for the next steps

An important but often overlooked part of spiritual well-being is **practicing gratitude.**

Take some time to work in a wellness routine and watch how quickly you will see results!

# தினசரி வேத வாசிப்புப் பகுதிகள் - மார்ச் 2023

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு,
என் கண்களைத் திறந்தருளும். சங்கீதம் 119:18

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | யாத்தி. 12:22-51 | லூக்கா 15 | யோபு 30 | 1 கொரிந். 16 |
| 2 | யாத்தி. 13 | லூக்கா 16 | யோபு 31 | 2 கொரிந். 1 |
| 3 | யாத்தி. 14 | லூக்கா 17 | யோபு 32 | 2 கொரிந். 2 |
| 4 | யாத்தி. 15 | லூக்கா 18 | யோபு 33 | 2 கொரிந். 3 |
| 5 | யாத்தி. 16 | லூக்கா 19 | யோபு 34 | 2 கொரிந். 4 |
| 6 | யாத்தி. 17 | லூக்கா 20 | யோபு 35 | 2 கொரிந். 5 |
| 7 | யாத்தி. 18 | லூக்கா 21 | யோபு 36 | 2 கொரிந். 6 |
| 8 | யாத்தி. 19 | லூக்கா 22 | யோபு 37 | 2 கொரிந். 7 |
| 9 | யாத்தி. 20 | லூக்கா 23 | யோபு 38 | 2 கொரிந். 8 |
| 10 | யாத்தி. 21 | லூக்கா 24 | யோபு 39 | 2 கொரிந். 9 |
| 11 | யாத்தி. 22 | யோவான் 1 | யோபு 40 | 2 கொரிந். 10 |
| 12 | யாத்தி. 23 | யோவான் 2 | யோபு 41 | 2 கொரிந். 11 |
| 13 | யாத்தி. 24 | யோவான் 3 | யோபு 42 | 2 கொரிந். 12 |
| 14 | யாத்தி. 25 | யோவான் 4 | நீதிமொழி. 1 | 2 கொரிந். 13 |
| 15 | யாத்தி. 26 | யோவான் 5 | நீதிமொழி. 2 | கலாத்தியர் 1 |
| 16 | யாத்தி. 27 | யோவான் 6 | நீதிமொழி. 3 | கலாத்தியர் 2 |
| 17 | யாத்தி. 28 | யோவான் 7 | நீதிமொழி. 4 | கலாத்தியர் 3 |
| 18 | யாத்தி. 29 | யோவான் 8 | நீதிமொழி. 5 | கலாத்தியர் 4 |
| 19 | யாத்தி. 30 | யோவான் 9 | நீதிமொழி. 6 | கலாத்தியர் 5 |
| 20 | யாத்தி. 31 | யோவான் 10 | நீதிமொழி. 7 | கலாத்தியர் 6 |
| 21 | யாத்தி. 32 | யோவான் 11 | நீதிமொழி. 8 | எபேசியர் 1 |
| 22 | யாத்தி. 33 | யோவான் 12 | நீதிமொழி. 9 | எபேசியர் 2 |
| 23 | யாத்தி. 34 | யோவான் 13 | நீதிமொழி. 10 | எபேசியர் 3 |
| 24 | யாத்தி. 35 | யோவான் 14 | நீதிமொழி. 11 | எபேசியர் 4 |
| 25 | யாத்தி. 36 | யோவான் 15 | நீதிமொழி. 12 | எபேசியர் 5 |
| 26 | யாத்தி. 37 | யோவான் 16 | நீதிமொழி. 13 | எபேசியர் 6 |
| 27 | யாத்தி. 38 | யோவான் 17 | நீதிமொழி. 14 | பிலிப்பியர் 1 |
| 28 | யாத்தி. 39 | யோவான் 18 | நீதிமொழி. 15 | பிலிப்பியர் 2 |
| 29 | யாத்தி. 40 | யோவான் 19 | நீதிமொழி. 16 | பிலிப்பியர் 3 |
| 30 | லேவி. 1 | யோவான் 20 | நீதிமொழி. 17 | பிலிப்பியர் 4 |
| 31 | லேவி. 2,3 | யோவான் 21 | நீதிமொழி. 18 | கொலோசெயர்1 |